[திரு. எம். பக்தவத்சலம்] [29th February 1964

தல்களினால் சுமார் ஒரு கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிடைக்குமென மதிப்பிடப்படுகிறது. இதனால் ரெவின்யூ கணக்கில் துண்டு விழும் தொகை 2 கோடியே 34 லட்சம் ரூபாயாகக் குறையும்.

முடிவுரை.

32. நான் உங்கள் முன்பு சமர்ப்பித்துள்ள இந்த வரவு நிறைவேற்றுவதில் ஏற்பட்டுள்ள விரைவும், விறுவிறுப்பும் நிதி பற்றாக்குறையால் ஒரு சிறிதும் குன்றக்கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில் உருவாகியது. உடனடியாகக் கிட்டும் நிதி வசதிகளை மட்டும் கருத்திற்கொண்டு அவற்றிற்கேற்பத் திட்டங்களைச் சுருக்கிக் கொள்வது எளிது. ஆனால் அது சிறப்பும் பெருமையும் வளர்ச்சியும் நிறைந்த வழியாகாது. நம்முடைய தற்போதைய சௌகரியத்தையே எண்ணி, சமுதாயத்தின் நீண்டகால நலன்களைப் புறக்கணிப்பது சிறப்புடைய செயலாகாது. எனவே, ஒவ்வொரு துறையிலும் ஏற்படவேண்டிய வளர்ச்சியின் எல்லையை நிர்ணயித்து, பின்னர், அவைகளைச் சுணக்கம் சிறிதுமின்றி நிறைவேற்றுவதற்கான நிதி வசதிகளை அடைவதில் நாட்டம் செலுத்தியுள்ளோம். இந்த வரவு செலவுத் திட்டத்தில் என்னால் கூறப்பட்ட யோசனைகள், திட்டத்தின் முக்கியமான லட்சியங்களை அடைவதில் இம் மாநிலத்தை மேலும் ஒரு படி உயர அழைத்துச் செல்லுகின்றனவா இல்லையா என்பதையே ஓர் உரைகல்லாக வைத்து இந்த வரவு-செலவுத் திட்டத்தை மதிப்பிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு மதிப்பிடும்போது இம் மாநிலத்தின் பொருளாதாரத்தின் இன்றைய நலன்களையும் தொலைநோக்குடன் நெடுங்கால நலன்களையும் பேணி வளர்க்கும் வகையில் இந்த வரவு-செலவுத் திட்டம் அமைந்திருப்பதைக் காணலாம். எனவே, இந்த வரவு-செலவுத் திட்டத்தை இச் சபை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 2nd March 1964.

The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rulus and Orders.

109. *Notification issued with* G.O. *Ms. No* 3395, *Revenue, dated* 3rd *December* 1963, *regarding the registration without a declaration under section* 19 (1) *of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act*, 1961, *any document relating to transfer of land by mortgage without possession* [*Laid on the Table of the House under section* 112 (2) *of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act*, 1961 (*Madras Act* 58 *of* 1961).]